[2015 ஆகஸ்ட் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி

***41783—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், தற்போது தங்கும் விடுதி கட்டுவதற்குப் போதிய சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

171—

மீன் விற்பனை நிலையம்

***53874—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 ஆகஸ்ட் 31]

(அ) வேளச்சேரி தொகுதி, விஜய நகரம் அல்லது தரமணியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, விஜய நகரம் மற்றும் தரமணி பகுதிகளில் மாநகராட்சி நிருவாகம்மூலம் இடம் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் மீன் விற்பனை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருள் தரும் அன்னையாய், அன்பிற்கு ஒரு கோயிலாய், அடியேன் நெஞ்சில் இருக்கும் தெய்வமாய், அம்மா உங்கள் உழைப்பால் (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அடைந்த வெற்றி ஒரு சாதனை. அம்மா, உங்கள் உழைப்பால் தமிழகம் அடைந்த வெற்றி ஒரு சரித்திரம். புடம் போட்ட தங்கம் மட்டுமல்ல அம்மா நீங்கள், அம்மா! நாள்தோறும் புதிய பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கும் வைரம் அம்மா நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடிய விரைவில் அதற்கான இடத்தினை மாநகராட்சிமூலம் தேர்வு செய்து தங்களின் மேலான பார்வைக்குத் தெரிவிக்கின்றேன். மீன் விற்பனை நிலையம் அமைக்க உறுதியளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லை ஒட்டியிருக்கக்கூடிய*

ஊத்தமலை, ஒகேனக்கல், பிலிகுண்டு ஆகிய பகுதிகளில் சுமார் 700—க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். அந்தப் பகுதிகளிலே மீன் விற்பனை நிலையம் அமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடத்திலே மனு கொடுத்து, மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். மரியாதைக்குரிய மீன் வளத் துறையினுடைய உதவி இயக்குநர் அவர்களால் அது கிடப்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆக, வேறு எதுவும் இல்லாதபட்சத்தில், மீன் விற்பனை நிலையத்தை வைத்து மீனவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக ஒகேனக்கல்லிலே ஒரு புதிய மீன் விற்பனை நிலையத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் விற்பனை நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்து கொடுத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உடன் நடவடிக்கை எடுத்து, அதை நிறைவேற்றிவைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரையில் கொள்ளிடம் ஆறு இரண்டாகப் பிரிந்து, அணைக்கரை நடுப் பகுதியாக உள்ள ஒரு பகுதி, ஊராட்சி. மீன் விற்பனையை நூற்றுக்கணக்கான வியாபாரிகள் நீண்ட நெடிய காலமாக அங்கு செய்து வருகிறார்கள். அவர்களுக்கென்று ஒரு மீன் அங்காடி இல்லாத சூழ்நிலையில், சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்வு செய்யப்பட்டவுடன், முதலாம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அணைக்கரையில் மீன் அங்காடியைக் கட்டி,

திறப்பு விழா நடத்தி இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

முற்பகல் 10–30

தஞ்சை மாவட்டம், அரியலூர் மாவட்டம், கடலூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் ஒன்று கூடுகிற ஊர், அணைக்கரை ஊராட்சி. நூற்றுக்கணக்கான மீன் வியாபாரிகள் தங்களுடைய மீன் விற்பனைபோக மீதமுள்ள மீன்களைப் பாதுகாப்பற்ற முறையில் வைத்து மறுநாள் விற்பனை செய்யக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீன் வியாபாரிகள் வியாபாரம் செய்ய, மீன் அங்காடியில் குளிர் சாதனப் பெட்டி வசதியுடன்கூடிய அறையை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் விற்பனை நிலையம் அமைக்கப்படுமா என்பதுதான் மூலக் கேள்வி. இருப்பினும், குளிர் சாதனப் பெட்டியுடன்கூடிய மீன் விற்பனை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தமிழக மக்களுடைய நல்வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. குறிப்பாக, மீன் வளத் துறையில் அபரிமிதமான திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பது நாடறிந்த ஒன்று. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கும் அந்த இடத்தில் ஆய்வு செய்யப்பட்டு, வாய்ப்பு இருப்பின், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.